# INFORMATION BOOKLET
# தகவல் கையேடு

## ACCESS TO JUSTICE FOR ALL
## யாவருக்கும் நீதி பெற சமவாய்ப்பு

### LEGAL SERVICES
### சட்ட சேவைகள்



Call us
at
15100
1800 425 2441
(Toll Free Number)
Or
Contact The Nearest
Legal Services
Institution

அழைக்க
15100
1800 425 2441
(கட்டணமில்லா
தொலைபேசி எண்
அல்லது அருகிலுள்ள
சட்டசேவைகள் மையத்தை
அணுகவும்)

**TAMILNADU STATE LEGAL SERVICES AUTHORITY**
North Fort Road, High Court Campus, Chennai - 600 104.
Tel : 044 - 2534 2834.





## சட்டச்சேவைகள்
## தேசிய சட்டப்பணிகள் ஆணையம் குறித்து

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 39அ, சமூகத்தின் வறிய மற்றும் நலிந்த பிரிவினர்களுக்கு இலவச சட்ட சேவை வழங்க வகை செய்து, அனைவருக்குமான நீதியை உறுதி செய்கிறது. அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்புக் கூறுகள் 14 மற்றும் 22 (1) ஆகியவையும், சட்டத்தின் முன்பு அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சமவாய்ப்பு என்ற அடிப்படையில் நீதி வழங்கும் சட்டமுறை ஆகியவற்றை உறுதி செய்வதை, அரசுக்கு கடமையாக்குகின்றன. 1987-ஆம் ஆண்டில், சட்ட சேவைகள் ஆணைய சட்டமானது பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்டு, சம வாய்ப்பு அடிப்படையில், சமூகத்தின் நலிந்த பிரிவினருக்கு இலவச சட்ட சேவைகள் வழங்க நாடு தழுவிய பணியமைப்பை நிறுவ நடைமுறைக்கு வந்தது. அதன் பின்னர், நால்சா எனப்படும் தேசிய சட்டப்பணிகள் ஆணையமானது தேசிய அளவில் நிறுவப்பட்டது.

### நமது நோக்கம் :

கடைநிலையாக்கப்பட்ட மற்றும் வசதியற்ற பிரிவினர்களுக்கு நேர்மையான மற்றும் அர்த்தமுள்ள நீதியை வழங்கும் பொருட்டு, அவர்களும் இணைந்த சட்ட முறையை ஏற்படுத்துதல்.

### நமது இயக்கம் :

சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட மற்றும் தவிர்க்கப்பட்ட பிரிவினருக்கும் சட்ட அதிகாரம் கிடைக்க வேண்டி தரமான சட்ட பிரதிநிதித்துவம் வழங்கியும் சட்ட அறிவு மற்றும் விழிப்புணர்வு

## Legal Services
## About NALSA

Article 39A of the Constitution of India provides for free legal aid to the poor and weaker sections of the society and ensures justice for all. Articles 14 and 22(1) of the Constitution also make it obligatory for the State to ensure equality before law and a legal system which promotes justice on the basis of equal opportunity to all. In 1987, the Legal Services Authorities Act was enacted by the Parliament which came into force on 9th November, 1995 to establish a nationwide uniform network for providing free and competent legal services to the weaker sections of the society on the basis of equal opportunity. The National Legal Services Authority (NALSA) was thereafter constituted at the National level.

### OUR VISION:

To promote an inclusive Legal System in order to ensure fair and Meaningful Justice to the marginalized and disadvantaged sections.

### OUR MISSION:

To legally empower the marginalized and excluded groups of the society by providing effective legal representation,

நிகழ்ச்சிகள் நடத்தி அதன்படி கிடைக்கக்கூடிய நலன்கள் தகுதியான பயனாளிகள் பெறுவதற்கு பாலமாக இருத்தல்.

மக்கள் நீதிமன்ற அமைப்புகள் மற்றும் மாற்று முறைத்தீர்வு இயக்கங்களை பலப்படுத்தி, அதன் மூலம் எளிமையான, விரைவான மற்றும் செலவில்லாமல் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதும் சமூதாயத்தில் ஏழ்மையான மற்றும் குறைவான சலுகைகள் பெறும் பிரிவினருக்கும் உதவி செய்து அதன் மூலம் நீதிதுறையின் விசாரணை பளுவை குறைக்க உதவியாக இருத்தல்.

## தேசிய சட்டப்பணிகள் ஆணையம் மற்றும் மாநில சட்டப் பணிகள் ஆணையங்கள் அமைத்தல் :

தேசிய அளவில் இந்திய தலைமை நீதிபதி நால்சாவின் புரவலர் ஆவார். உச்சநீதிமன்றத்தின் முதல் மூத்த நீதிபதி அதன் நிர்வாகத் தலைவர் ஆவார். மத்திய அரசு இந்திய தலைமை நீதிபதியை கலந்து ஆலோசித்து நால்சா வின் உறுப்பினர் / செயலரை நியமிக்கும்.

உச்சநீதிமன்ற சட்டப்பணிகள் குழு, இந்திய உச்ச நீதிமன்றம் சம்பந்தபட்ட சட்டப்பணிகளை நிர்வகித்து செயல்படுத்த அமைக்கப்பட்டதாகும். ஒவ்வொரு மாநிலத்திலும், மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி அதன் தலைமை புரவலராகவும் உயர் நீதிமன்றத்தின் முதல் மூத்த நீதிபதி அதன் நிர்வாக தலைவராகவும் கொண்டு அமைக்கப்பட்டது.

ஒவ்வொரு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழுவுக்கும் ஒரு உறுப்பினர் / செயலர் இருப்பார். ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திலும், ஒரு உயர் நீதிமன்ற சட்டப்பணிகள் குழுவும், ஒரு நீதித்துறை அலுவலர் அதன் செயலாளராகவும் கொண்டு அமைக்கப்பட்டது.

conducting legal literacy and awareness programmes to bridge the gap between the legally available benefits and the entitled beneficiaries.

To strengthen the system of Lok Adalats and other Alternate Dispute Resolution mechanisms in order to provide for informal, quick and inexpensive resolution of disputes to the indigent and underprivileged sections of the society and minimize the burden of adjudication on the overburdened judiciary.

## Constitution of NALSA & SLSAs

At the national level, the Chief Justice of India is the Patron-in Chief of NALSA. The Senior Most Judge of the Supreme Court is the Executive Chairman. The Central Government in consultation with the Chief Justice of India has also appointed a person as the Member Secretary of NALSA.

Supreme Court Legal Services Committee has been constituted to administer and implement the legal services programme insofar as it relates to the Supreme Court of India.

In every State, a State Legal Services Authority (SLSA) has been constituted with the Chief Justice of the High Court as the Patron- in-Chief and the Senior Most Judge of the High Court as the Executive Chairman. There is a Member Secretary for each SLSA.

ஒவ்வொரு உயர்நீதிமன்றத்திலும், ஒருஉயர்நீதிமன்ற சட்டப்பணிகள் குழுவும் ஒரு நீதித்துறை அலுவலர் அதன் செயலாரகவும் கொண்டு அமைக்கப்பட்டது.

மாவட்ட அளவில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுஉருவாக்கப்பட்டு அதன் தலைவராக மாவட்ட நீதிபதியும் மூத்த நீதித்துறை அதிகார் அதன் செயலராக இருப்பார்.மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவராக மாவட்ட நீதிபதி இருப்பார் மற்றும் மூத்த நீதித்துறை அதிகாரி அதன் செயலராக இருப்பார்.

அதே போல தாலுக்கா அளவில் தாலுக்கா சட்டப் பணிகள் ஆணைக்குழுக்கள் நால்சாவின் கொள்கைகள் மற்றும் உத்தரவுகளை செயல்படுத்த ஏற்பட்டதாகும்

**சட்டப்பணிகள் குழு அமைப்புகளின் செயல்பாடுகள்:**

தேசிய சட்டப்பணிகள் ஆணையத்தின் கொள்கைகள், கோட்பாடுகள், வழிக்காட்டிகள் மற்றும் திறம்பட்ட செயல் திட்டங்களை நிறைவேற்ற மாநில சட்டப்பணி ஆணைக்குழுக்கள் நாடு முழுவதும் செயல்படுத்த ஏற்பட்டதாகும்.

முதன்மையாக, மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, தாலுகா சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் இதர அமைப்புகள் கீழ்கண்ட முக்கிய காரியங்களை செயல்படுத்த வலியுறுத்தப்பட்டது.

1. தகுதியுள்ள நபர்களுக்கு இலவச மற்றும் தகுந்த சட்டப்பணிகள் வழங்கவேண்டும்.
2. தாவாக்களை இணக்கமாக சமரசம் செய்ய மக்கள் நீதிமன்றங்கள் அமைக்க வேண்டும்.
3. சமுதாயத்தில் நலிந்த மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவினர்களுடைய உரிமைகள் பற்றிய சட்ட விழிப்புணர்வு எற்படுத்தவேண்டும்.

In every High Court, a High Court Legal Services Committee has been constituted with a Judicial Officer as the Secretary.

At the District Level, District Legal Services Authorities have been constituted with the District Judges as the Chairman of the District Legal Services Authority and a Senior Judicial Officer as the Secretary of the District Legal Services Authority.

Similarly, at the Taluka Level Taluka Legal Services Committee have been constituted to give effect to the policies and directions of NALSA.

**Functioning of Legal Services Institutions :**

NALSA lays down policies, principles, guidelines and frames effective and economical schemes for the State Legal Services Authorities to implement throughout the country.

Primarily, the State Legal Services Authorities, District Legal Services Authorities, Taluka Legal Services Committees, etc. are mandated to discharge the following main functions:

I. To provide free Competent Legal Service to eligible persons;,

II. To organize Lok Adalats for amicable settlement of disputes;

III. To create legal awareness about the rights of the weaker and mar ginalized sections of the society;

4. நால்சாவின் திட்டங்கள், கொள்கைகள் மற்றும் தடுப்பு சட்டப்பணிகள் நிகழ்ச்சிகள் மூலம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

**இலவச சட்டசேவைகளைப் பெற தகுதி வாய்ந்த நபர்கள் :**

- பெண்கள் மற்றும் குழந்தைகள்.
- அட்டவணையிடப்பட்ட (தாழ்த்தப்பட்ட) பழங்குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள்
- தொழிற்சாலை பணியாளர்
- பேரிடர், வன்முறை, வெள்ளம், வறட்சி நிலநடுக்கம் மற்றும் தொழிற்சாலை பேரிடர் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்கள்.
- மாற்றுத் திறனாளர்கள்
- காவலில் இருக்கும் நபர்கள்
- ஆண்டு வருமானம் ரூ. 3 லட்சம் மிகாது ஆண்டு வருவாய் உள்ளவர்கள் அல்லது மைய அல்லது மாநில அரசினால் நிர்ணயிக்கப்பட்ட வருவாய் மிகாதவர்கள்
- ஆள்கடத்தல் தொழிலால் பாதிக்கப்பட்ட மனிதர்கள் அல்லது பிச்சைக்காரர்கள் ஆகியோர்.
- மூத்த குடிமக்கள்

**இலவச சட்டச் சேவைகள் :**

நீதிமன்றத்திலோ, தீர்ப்பாயத்திலோ அல்லது அதிகாரியின் முன்போ, வழக்கை நடத்த அல்லது சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள, வழக்குரைஞரின் சேவையை பெற முடியாத வறியவர்களுக்கு, உரிமையில் மற்றும் குற்றவியல் நடைமுறைகளில் இலவச சட்ட உதவி வழங்குவதற்கான பிரிவிற்கு இலவச சட்டப்பணிகள் ஆவண செய்கிறது.

**இலவச சட்ட உதவி என்பதாவது:**

அ. சட்ட நடைமுறைகளில் வழக்குரைஞரால் பிரதிநிதித்துவம் செய்யப்படல்,

ஆ. வழக்குரைகள், மேல் முறையீட்டுரைக்கான குறிப்பாணை, சட்ட நடைமுறைகளில் அச்சு மற்றும் ஆவணங்களின் மொழியாக்கம்

IV. To implement the Schemes and policy directions of NALSA through strategic and preventive Legal Services Programmes.

**Persons eligible for geting free legal services include :**

- Women and children
- Members of SC/ST
- Industrial workmen
- Victims of mass disaster, violence, flood, drought, earth quake, industrial disaster
- Persons with Disability
- Persons in Custody
- Persons whose annual income does not exceed Rs. 3 lakh or as notified by the Central/State Government
- Victims of Trafficking in Human beings or begger.
- Senior Citizens

**Free Legal Services :**

Free legal services entail the provision of free legal aid in civil and criminal matters for those poor and marginalized people who cannot afford the services of a lawyer for the conduct of a case or a legal proceeding in any court, tribunal or before an authority.

**Provision of free legal aid may include :**

a. Representation by an Advocate in legal proceedings.

b. Preparations of pleadings, memo of appeal, paper book including

உட்பட்ட புத்தகம் ஆகியவற்றை உருவாக்கல்,

இ. சட்ட ஆவணங்களை வரைதல், சிறப்பு அனுமதி மனு மற்றும் இன்னபிறவற்றை வரைதல்.

ஈ. எந்த வழக்கு நடவடிக்கையிலோ அல்லது எந்நீதிமன்றத்தின் சட்ட நடவடிக்கைகளுக்கு முன்பாகவோ அல்லது எந்த அதிகாரியின் முன்போ அல்லது தீர்ப்பாயத்தின் முன்பாகவோ வழக்கு அல்லது சட்ட நடை முறைகளை நடத்த சேவை செய்தல்.

உ. எந்த சட்டநடவடிக்கையிலும் ஆலோசனை வழங்குதல்.

இலவச சட்டப்பணிகள், சட்ட உதவி அளிப்பதோடு, மைய அரசினாலோ அல்லது இயற்றப்பட்ட, சமூக நலசட்டங்களின் கீழ் அல்லது திட்டங்களின் கீழ் கிடைக்கதக்க பயன்களை பெறுவதற்கு, பயனாளிக்கு ஆலோசனை வழங்குதல் மற்றும் வேறு ஏதேனும் விதங்களில் நீதியை பெறுவதை உறுதி செய்தல் ஆகியவற்றை மேற்கொள்கிறது.

## சட்டஉதவிக்கு எவ்வாறு விண்ணப்பிப்பது?.

- இலவச சட்ட உதவிகள் தேவைப்படும் ஒரு நபர், சம்மந்தப்பட்ட சட்டப்பணிகள் ஆணையம் அல்லது சட்டப்பணிகள் குழுவை, எழுத்து வடிவிலான விண்ணப்பத்தின் மூலமோ அல்லது அதிகாரியால் பரிந்துரைக்கப்பட்ட படிவத்தை நிரப்பியோ, சட்ட உதவி கோருவதற்கான காரணங்கள் அல்லது குறைகளை சுருங்கக் கூறி அனுப்பி வைத்தல் மூலம் அணுக முடியும்.
- விண்ணப்பதாரர், எழுத படிக்கத் தெரியாதவராக இருந்தால் ஆணையம் அல்லது குழுவின் உறுப்பினர் செயலரோ அல்லது வேறு ஏதேனும் அலுவலரோ, விண்ணப்ப தாரருடைய வாய்மொழி கோரிக்கையை ஆவணமாகப் பதிந்து அதில் அவருடைய கைரேகை / கையெழுத்தைப் பெற வேண்டும். அதுவே அவருடைய விண்ணப்ப மாகக் கருதப்படும்.

Printing and translation of documents in legal proceedings:

c. Drafting of legal documents special leave petition etc.

d. Rendering of any service in the conduct of any case or other legal proceeding before any court or other Authority or tribunal and;

e. Giving of advice on any legal matter.

Free Legal services also include provision of aid and advice to the beneficiaries to access the benefits under the welfare statues and schemes framed by the Central Government or the State Government and to ensure access to justice in any other manner.

## How to apply for legal aid?

- A person in need of free legal services can approach the concerned authority or committee through an application which could either be sent in writtingor by filling up the form prescribed by the Authorities stating in brief the reasons for seeking legal aid or the grievance.
- If the applicant is illiterate or is not in a position to write, the Member Secretary or any officer of legal services Authority/Committee shall record his verbal submission and obtain his thumb impression / Signature on the record and such

- விண்ணப்பப் படிவத்தை நிரப்புகையில் தன்னார்வ தொண்டர்களும் கூட அதற்கு உதவலாம்.
- விண்ணப்பதாரர் சட்டச் சேவைகளை கோருவதற்கான தகுதி நிலையை சரிபார்த்துக் கொள்ளவேண்டும்.

**சட்ட சேவைகள் திரும்பபெறுவது எப்படி?**

- உதவிபெற்ற நபர் போதிய வசதி பெற்றிருக்கும்போது
- சட்ட உதவி பெற்றவர் தவறுகளை எடுத்துரைத்து அல்லது மோசடி செய்து சட்டச் சேவைகள் பெற்றிருந்தால் அப்போது திரும்பப் பெறலாம்.
- சட்டப்பணிகள் ஆணைக்குழு/குழு நியமித்த நபர் அல்லாத ஒரு சட்ட வழக்கறிஞர் தொழில் புரிபவரை அமர்த்தியிருந்தால் அப்பொழுது திரும்பப் பெறலாம்.
- சட்ட உதவி பெற்றவர் இறந்தால் திரும்பப் பெறலாம். ஆனால் உரிமையியல் வழக்கு நடவடிக்கைகளில் உரிமை அல்லது பொறுப்பு தொடர்வதால் திரும்ப பெற இயலாது.
- சட்ட உதவி கோரிய மனு அல்லது சம்மந்தப்பட்ட பிரச்சனை சட்ட நடவடிக்கைகளை துஷ் பிரயோகம் செய்தாலோ சட்ட உதவிகள் பெற்றதை அவ்வாறு பயன்படுத்தினாலோ திரும்பப் பெறலாம்.

**சட்ட உதவிகள் எங்கு அல்லது எவ்வாறு மறுக்கப்பட்டு இருந்தால் மேல் முறையீடு செய்யலாம்:**

ஆம், மேல் முறையீடு, சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் தலைவர்/குழுத் தலைவர் ஆகியோருக்கு நியாயமான கால அவகாசத்திற்குள் கொடுக்கலாம்.

record will be treated as his application. A Para legal Volunteer can also assist the person while filling the application form.

- The applicant shall be required to verify the eligibility criteria for seeking legal services.

**When can legal services be withdrawn?**

- When the aided person is possessed of sufficeient means.
- Where the aided persons obtained legal services by misrepresentation or fraud.
- Where the person engages a legal practitioner other than the one assigned by the Legal Sevices authority/ Committee.
- In the event of death of the aided person except in the case of civil proceedings where the right or liability survives.
- Where the application for legal service or the matter in question is found to be an abuse of the process of law or of legal services.

**Whether and where appeal can be filed for denial of legal services?**

Yes, appeal can be made to the Chairman of the Authority/ Committee on denial of grant of legal services within a reasonable time.

**Whether and where complaints of**

## புகார்கள் அல்லது அபிப்பிராயங்களை எங்கு, எப்பொழுது தாக்கல் செய்யலாம்:

ஆம் புகார் / தூண்டுரைகள் இலவச சட்டஉதவி மற்றும் சேவைகளின் சரத்துக்களை மேண்மைப்படுத்த வரவேற்கப்படுகிறது

புகார்கள் / அபிப்பிராயங்கள் அஞ்சல் அல்லது மின்னணு அஞ்சல் மூலம் உறுப்பினர் / செயலர் / செயலாளர்களுக்கு அனுப்பலாம் அல்லது சட்டப்பணிகள் குழுக்கள் அல்லது முகப்பு அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள புகார் பெட்டிகளில் போடலாம்.

## மக்கள் நீதிமன்றங்கள்:

சாதரண மனிதர்களுக்கும் கிடைக்கக்கூடிய ஒரு மாற்றுமுறை தீர்வு செயலமைப்பாக மக்கள் நீதிமன்றம் உள்ளது. இந்த அமைப்பின் மூலம் சட்டப்படி நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள பிரச்சனைகள்/ வழக்குகள் அல்லது வழக்குதாக்கலுக்கு முன் உள்ள பிரச்சனைகள் ஆகியவற்றை சுமூகமாக சமரசம் / சமாதானம் செய்து கொள்ளலாம். சட்டப்பணிகள் ஆணையம் சட்டம் 1987-ன் படி, மக்கள் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்முடிவுகள் உரிமையியல் நீதிமன்றங்களில் வழங்கப்படும் தீர்ப்பாணைக்கு ஒப்பாகக் கருதப்படுவதுடன் அது இறுதியானது ஆகும். அனைத்துத் தரப்பினர்களையும் கட்டுப்படுத்துவதுடன் அதற்கெதிராக எந்த நீதிமன்றத்திலும் மேல் முறையீடு தாக்கல் செய்ய இயலாது.

மக்கள் நீதிமன்றங்களை, சட்ட பணிகள் ஆணையம் மற்றும் குழுக்கள், 1987-ம் வருட சட்டப்பணிகள் ஆணையச் சட்டப்பிரிவு 19 ன் படி, நீதிமன்றங்களில் முன்பாக நிலுவையில் உள்ள வழக்குகளில் சமரசம் செய்யவும் மற்றும் வழக்கு தாக்கலுக்குமுன் உள்ள பிரச்சனைகளில் தீர்வுகாண நடத்தப்பட்டு வருகிறது. மக்கள் நீதிமன்றத்தில் கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காண எடுத்துக் கொள்ளப்படலாம்.

- திருமண/ குடும்ப பிரச்சனைகள்
- சமரசம் செய்யக் கூடிய குற்ற வழக்குகள்

## suggestion can be filed?

Yes, Complaints/Suggestions are welcome for improvement in the provision of free legal aid and services.

Complaints/suggestions can be sent by post or email addressed to the Member Secretary/Secretaries or deposited in the complaint boxes placed at the LegalServices Clinics or Front offices for this purpose.

## Lok Adalats:

Lok Adalat is an important Alternative Disputes Resolution mechanism available to a common person. It is a forum where the disputes/cases pending in the court of law or at pre-litigation stage are settled/compromised amicably. Under the Legal Services Authority Act, 1987 an award made by a Lok Adalat is deemed to be a decree of a civil court and is final and binding on all parties and no appeal lies against thereto before any court.

Lok Adalats are being organized by the Legal Services Authorities/Committees for settlement of cases pending before courts u/s 19 of the Legal Services Authorities Act, 1987 and also for matters at pre-litigative stage. The following types of matters may be taken up in the Lok Adalats:

- Matrimonial/Family disputes
- CriminalCopoundable Offence cases

- நில ஆக்கிரமிப்பு வழக்குகள்
- தொழிலாளர் பிரச்சனைகள்
- தொழிலாளர்களுக்கான இழப்பீடு வழக்குகள்
- வங்கி மீட்பு வழக்குகள் (தேசியமயமாக்கப்பட்ட, பன்னாட்டு மற்றும் தனியார் வங்கிகள்)
- ஓய்வூதிய வழக்குகள்
- வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரிய வழக்குகள் மற்றும் வீட்டு நிதி வழக்குகள்
- நுகர்வோர் குறை வழக்குகள்
- மின்சார வழக்குகள்
- தொலைபேசி ரசீது வழக்குகள்
- வீட்டுவரி உள்ளிட்ட நகராட்சி வழக்குகள்
- பாகப்பிரிவினை, அனுபவத்தை திரும்பப் பெறுதல், வாடகை பிரச்சனைகள், வசதியுரிமை பிரச்சனைகள், ஒப்பந்தம் மற்றும் இதர பிரச்சனைகள் உள்ளிட்ட உரிமையியல் பிரச்சனைகள்

கட்டாய சட்ட முன்னமைப்பு முறைகள் மற்றும் இசைவிணக்கதீர்வு மூலம் '**பொது பயன்பாட்டு பணிகள்**' சம்பந்தப்பட்ட பிரச்சனைகளுக்கு சமரசத் தீர்வுகாணும் நோக்கத்தில் 1987-ம் வருட சட்டபணிகள் ஆணைக் குழுக்கள் சட்டத்தில் அத்தியாயம் VI-A, 2002-ம் வருடம் சேர்க்கப்பட்டது. பொது பயன்பாட்டுச் சேவைகள் என்பது போக்குவரத்து சேவைகள், அஞ்சலக தந்தி அல்லது தொலைபேசி சேவைகள், மின்சார விநியோகம், வெளிச்சம் அல்லது பொதுமக்களுக்கு தண்ணீர், பொது சுகாதாரம்,பொதுப் பராமரிப்பு அமைப்புகள் அல்லது சுகாதாரம், மருத்துவமனை அல்லது மருந்தக சேவைகள் அல்லது காப்பீட்டு சேவைகள் என்பதாகும். இதன் தொடர்பாக, நிரந்தர மக்கள் நீதிமன்றங்கள் அநேக மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

- Land Acquisition Cases Labour Disputes
- Workmen's compensation cases
- Bank Recovery cases (Nationalised, Multinational & Private Banks)
- Pension cases
- Housing Board and slum clearance cases & Housing Finance cases
- Consumer Grievance cases
- Electricity matters
- Telephone Bills disputes
- Municipal matters including House Tax cases etc.
- Other Civil matters such as parti tion, recovery of possession, rent mat ters, easmentary rights, contracts etc.

Chapter VI-A had been inserted in the Legal Services Authorities Act, 1987 in the year 2002, with a view to provide compulsory pre-litigative mechanism for conciliation and settlement of disputes relating to Public Utility Services ('PUS'). PUS are those relating to transport service, postal, telegraph or telephone service, supply of power, light or water to the public, system of public conservancy or sanitation, service in hospital or dispensary or insurance service. Pursuant to this, Permanent Lok Adalats have been set up in most states.

## சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்:

சட்டப்பணிகள் அமைப்புகள், சமுதாயத்தில் நலிந்த மற்றும் ஒதுக்கப்பட்ட பிரிவுனருக்குரிய உரிமைகள் சம்மந்தமாக சட்ட அறிவு மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்த கடமைப்பட்டுள்ளன. இந்த விழிப்புணர்வு மற்றும் சட்ட அறிவு நிகழ்ச்சிகள் மாநகரங்கள் மற்றும் நகரங்களில் மட்டுமின்றி கிராமங்கள் மற்றும் தொலை தூர பகுதிகளிலும் நடத்தப்படுகிறது. சட்ட அறிவு குழுக்கள் மற்றும் உதவிமையங்கள், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், குழந்தைகள், மூத்த குடிமக்கள் ஒருங்கிணைக்கப்படாத தொழிலாளர்கள், மாற்றுப் பாலித்தினர், சிறை வாசிகள், மனநலம் குன்றியவர்கள், ஊனமுற்றோர், பேரழிவால் பாதிக்கப்பட்டவர்கள், பெண்கள் ஆகியோரது அடிப்படை உரிமைகள் மற்றும் அடிப்படை கடமைகள் ஆகிய பிரச்சனைகளை உள்ளடக்கியதாகும்.

## தேசிய சட்டப்பணிகள் ஆணைக் குழுவால் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு முறைகள் மற்றும் செயல்திட்டங்கள்

தேசிய சட்டப்பணிகள் ஆணையம். (நால்சா) சட்டப் பணிகள் அமைப்புகளின் பணிகளைத் திறமையாக செய்ய பல வகையான ஒழுங்கு முறைகள் உருவாக்கி, அதனை செயல்படுத்தி வருகிறது. அதன் மூலம் தங்களுடைய முக்கிய செயல்பாடுகள் மற்றும் திட்டங்களை திறம்பட, தடுப்பு மற்றும் தேவைக்கேற்ப செய்தும் வருகிறது.

## தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு திட்டங்கள் மற்றும் விதிமுறைகள்

- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (மக்கள் நீதிமன்றம்) ஒழுங்குமுறை விதிகள், 2009
- தேசிய சட்டபணிகள் ஆணைக்குழு (இலவச மற்றும் தகுதியான சட்டப்பணிகள்) ஒழுங்கு முறை விதிகள் 2010.
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக் குழு (சட்டப்பணிகள் மையம்) ஒழுங்குமுறை விதிகள், 2011,
- தன்னார்வ சட்டப் பணியாளர்களுக்கான திட்டம் (திருத்தப்பட்டது) தன்னார்வ சட்டப் பணியாளர்களுக்கான புத்தாக்கம் உருவாக்கம் மற்ற பயிற்சிகளின் பகுதி.

## Legal Awareness Programmes:

The Legal Services Institution are mandated to conduct legal literacy and awareness programmes about the rights of the weaker and marginalized sections of the society. These awareness & legal literacy programmes are organized not only in cities& towns but also in rural and remote areas. Legal literacy clubs and clinics also been set up schools and colleges.

The legal awareness programmes cover issues such as Child Rights, Rights of Senior Citizens, Un OrganisedWorkersTransgenders, Jail Inmates, Mentally ill and persons with Disability, Disaster Victims and Women Rights, Fundamental Rights and Fundamental Duties.

## Regulations &Schemes Formulated By National Legal Services Authority:

NALSA has promulgated and formulated various Regulations for Legal Services institutions for effective discharge of their core function and schemes under the preventive & strategic Legal Services Programme.

## NALSA Regulation & Schemes :

- National Legal Services Authority (Lok Adalat) Regulation, 2009.
- National Legal Services Athority( Free and Competent Legal Services) Regulation, 2010.
- National Legal Services Authority (Legal Service Clinics) Regulation,2011.
- Scheme of Para-Legal Volunteers (Revised) & Module for the Orientation-Induction-Refresher Courses for PLV Training

- சட்டப்பணிகள் ஆணைக்குழுக்கள் மூலமான பேரிடர் பாதிப்பாளர்களுக்கான சட்டப்பணிகள் திட்டம்.
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (ஆள் கடத்தல் மற்றும் வணிகரீதியான பாலியல் சுரண்டலால் பாதிக்கப்பட்டவர்கள்) திட்டம், 2015.
- தேசிய சட்டப்பணிகள் ஆணையம் (நட்பான முறையில் குழந்தை சார்ந்த சட்டச் சேவைகள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு திட்டம் 2015.
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (மலைவாழ் பழங்குடியின மக்களின் உரிமைகள் பாதுகாப்பு மற்றும் நடைமுறைபடுத்துவது) திட்டம், 2015
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (மன நோயாளிகள் மற்றும் மன இயலாமை உடைய நபர்களுக்கான சட்டப் பணிகள் ) திட்டம் 2015.
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (போதைப் பொருள் முறைகேடாகப் பயன்படுத்துபவர் மற்றும் போதை மருந்து ஒழிப்பில் உள்ள அச்சுறுத்தலுகளுக்கான சட்டசேவைகள்) திட்டம், 2015.
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (திறம் பட செயல்படுத்தும் வறுமை ஒழிப்பு) திட்டம்,2015
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (திராவகவீச்சால் பாக்கப்பட்டவர்களுக்கான சட்டப்பணிகள்) திட்டங்கள், 2016.
- தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு (மூத்த குடிமக்களுக்கான சட்டப்பணிகள்) திட்டம் 2016

- Scheme for Legal Services to DisasterVictims through Legal Service Authorities.
- NALSA (Victims of Trafficking and Scheme,2015.
- NALSA( Child Friendly Legal Services to Children and their Protection) Shemes,2015.
- NALSA( Lgal Services to the Workers in the Unorganised Sector) Scheme,2015.
- NALSA (Protection and Enforcement of Tribunal Rights), Scheme, 2015.
- NALSA (Legal Services to the Men tally Ill and Mentally Disabled Persons) Scheme,2015.
- NALSA (Legal Services to the Victims of Drug Abuse and Eradication of Drug Menace) Scheme, 2015
- NALSA Scheme (for EffectiveImplementation of Poverty Alleviation) Scheme,2015.
- NALSA (Legal Services to Victims of Acid Attacks) Scheme, 2016.
- NALSA (Legal Services to Senior Citizens) Scheme, 2016.

தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு
யாவருக்கும் நீதி பெற சமவாய்ப்பு
ACCESS TO JUSTICE FOR ALL
TAMILNADU STATE LEGAL SERVICES AUTHORITY

## சட்ட உதவி மற்றும் ஆலோசனை பெற

**இலவச அழைப்பிற்கு : 1800 425 2441**

**சட்ட உதவிக்கு : 044 - 2534 3363**

**24 x 7 அலைபேசி எண் : 94450 33363**

**தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு**

**இலவச அழைப்பிற்கு - 15100**

மின்னஞ்சல் : tnslsa.lae@gmail.com

## சட்ட ஆலோசனை இலவசமாக பெறலாம்

வாரந்தோறும் சனிக்கிழமை
காலை 11.00 மணிக்கு பொதிகை டிவியில்
**நீதிமன்றச் செய்திகள்**
நிகழ்ச்சியை பார்த்து பயனடையுங்கள்

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை
காலை 8.30 மணிக்கு வானொலியில்
1ம் அலைவரிசையில்
**சட்டத்தின் குரல்**
நிகழ்ச்சியை கேட்டு பயனடையுங்கள்


# தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு

வடக்கு கோட்டை சாலை, உயர்நீதிமன்ற வளாகம், சென்னை - 600 104.